வளன்ஆயம்
நெறிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# வள்ளுவம் கூறும் இல்லறவியல் மானுட விழுமியங்கள்

**கி. ஜோஸ் ஆல்வின்**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி)
தமிழாய்வுத்துறை,
திருச்சிராப்பள்ளி – 02

**முனைவர் ஜா.பெஞ்சமின் ஆரோன் டைட்டஸ்,**
ஆய்வு நெறியாளர் & உதவிப் பேராசிரியர்
தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி)
தமிழாய்வுத்துறை,திருச்சிராப்பள்ளி – 02.

**ஆய்வுச் சுருக்கம்**

திருக்குறள் ஒரு நாட்டிற்கு மட்டுமின்றி, உலக அளவில் வாழ்வியல் வழிகாட்டி நூலாகத் திகழ்கின்றது. உலக மக்கள் அனைவரும் பண்பாடு பெற்று உய்யும் நெறியினை எடுத்தியம்பும் ஒரு பொதுநூலாத் திகழ்கிறது. இதில் கூறப்படாத நெறிகளை வேறு எந்த நூலிலும் காண்பது அரிது. இன்றைய உலகில் மனித நேயம் மண்முடிப்போனதற்கு மனம் மாசுப்பட்டுப்போனதும் ஒரு காரணம் எனலாம். அனைத்து அறங்களுக்கும் ஆணிவேர் இல்லறமேயாகும். அந்தவகையில் திருக்குறளில் காணப்படும் இல்லறவியலில் காணலாகும் மனிட விழுமியங்களைப் பற்றி விளக்கி வரைவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**கலைச் சொற்கள்**

இடும்பை, சீர்மை, இரவலர், அனிச்சம்

**முன்னுரை**

திருக்குறளானது மனிதன் மனிதனாக வாழ்வதற்குறிய மதத்திற்கு நல்ல கருத்துக்களைத் தனக்குள் பொதிந்து வைத்துள்ளது. இது மனிதன் மனிதனாக வாழவதற்கு ஒரு வழிகாட்டியாக செயல்படுகின்றது. இந்நூல் 80க்கு மேற்பட்ட மொழிகளில் மொழிபெயரப்பு செய்யப்பட்டுள்ளது. மனித வாழ்வின் அனைத்து தேவைகளும் தனிமனித ஒழுக்கம், சமூக ஒழுக்கம், இல்லறநெறி போன்ற பொதுவுடைமைக் கருத்துக்களை உள்ளடக்கியது. தனிமனிதனின் ஒழுக்கம்

சமூக ஒழுக்கம் என்ற நிலையில் மனிதனுக்கும் அவனைச் சார்ந்த சமூகத்தற்கும் அறிவுரைகளை உலக மக்களுக்கெல்லாம் அறிவுறுத்தும் வகையில் பேசுகின்றது. இத்தகைய சிறப்புடைய திருக்குறளில் காணப்படும் இல்லறவியலில் மானிட விழுமியங்களைப் பற்றி ஆராய்வதே இவ்ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.

**விழுமியம் விளக்கம்**

விழுமியம் என்பது தனிமனிதனுடைய கடமைகளும், கட்டுபாடுகளின் தொகுப்புநெறிகள் அல்லது மதிப்புகள் ஆகியவையே விழுமியங்கள் ஆகும்.

குடும்பத்தில் மகிழ்ச்சியும் அமைதியும் பெற வேண்டுமென்றால் ஒவ்வொருவரும் தமக்கென சில கடமைகளையும், கட்டுப்பாடுகளையும் வகுத்துக் கொள்ள வேண்டும். இந்தக் கட்டுப்பாடு, கடமைகள் தான் விழுமியங்களாக எடுத்துரைக்கப்படுகின்றன. ஒருவரின் வாழ்வை மதிப்பீடு (Value) செய்வதற்கு அவனுடைய உயர்ந்த பண்புகள், ஒழுக்கநெறிகள் என அறியப்படுகிறது இதனையே,

**“பிறர் உனக்கு எதைச் செய்ய வேண்டும் என்று நீ நினைக்கிறாயோ?**

**ஆதனை நீ பிறருக்கு செய்ய வேண்டும்”[1] (லூக்.*6: 31*)**

என்ற விவிலிய வரிகளுக்கு ஏற்ப விழுமியங்கள் சமுதாயத்தில் ஏற்படும் மாற்றத்திற்கு ஏற்ப அந்தந்த காலத்திற்கு ஏற்றார் போல் உருவாகியுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

**விழுமியம் என்பதன் பொருள்**

விழுமியம் என்ற சொல்லுக்குத் தமிழில் மேலான, உயர்ந்த, மதிப்பு, நன்மை என்று பல பொருள்கள் உள்ளன. அகராதிகளின் துணை கொண்டு விழுமியத்தின் பொருளைக் காணமுடிகிறது.

யாழ்ப்பாண அகராதி விழுமியம் என்னும் சொல்லுக்கு இடும்பை, சிறப்பு, சீர்மை, நன்மை எனப் பொருள் கூறுகிறது.

ஊலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தமிழ் - ஆங்கில அகராதி விழுமியம் என்ற சொல்லுக்கு இடும்பை (Poverty), சிறப்பு (Oranament), சீர்மை (Good State or Condition) நன்மை (What is Good) எனச் சுட்டுகிறது.

கலைச்சொல் பேரகராதி Value என்ற ஆங்கிலச் சொல்லிற்குத் தரும் விளக்கம் மதிப்பு, விழுமியம், பெருமானம் எனப் பொருள் கூறுகிறது.

மூவர் தேவாரச் சொல்லகராதி விழுமியம் என்னும் சொல்லுக்கு குணம், சீர் எனப் பொருள் சுட்டுகிறது.

க்ரியாவின் தற்கால அகராதி விழுமியம் என்னும் சொல்லுக்கு மதிப்பு(Value), சிறந்த, உயர்வான என்ற பொருள் கூறுகிறது.

கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதி விழுமியம் என்ற சொல்லுக்கு இடும்பை, சிறப்பு, சீர்மை, நன்மை எனப பொருள் சுட்டுகிறது.

**தனிமனித ஒழுக்கம்**

மனிதன் எப்பொழுதும் நடுநிலையில் நின்று செயல்படவேண்டும். மனசாட்சிக்குக் கட்டுப்பட்டு உண்மையாகவும், நேர்மை உடையவனாகவும், பாரபட்சம் பார்க்காமல் பொதுநிலையில் நின்று செயல்படுதல் வேண்டும். இவை அனைத்தும் மனிதனுக்குள் இருக்கவேண்டிய பண்புகள் என வள்ளுவர் என்கிறார். மனிதன் மனம்போன போக்கில் வாழக்கூடாது அவன் தராசுகோல்போல் நடுநிலைத்தன்மையுடன் இருக்கவேண்டும் என்பதை,

**“சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்**

**கோடாமை சான்றோர்க் கணி”**[2] **(குறள்.*118*)**

என்ற குறள் கூறுகிறது. மனிதன் மனசாட்சிக்குப் பயப்படாமல் விரோதமாக நேர்மையற்றவனாக நடந்தால் அவன் இவ்வுலகில் வாழ்வதற்கு தகுதியற்றவன். அவ்வாறு இல்லாமல் வறுமையான சூழ்நிலையிலும் செல்வவளம் உள்ள சூழல்களிலும் மனசாட்சிக்கும் சமுதாயத்திற்கும் பயந்து நேர்மையாக இருந்தால் அவன் சான்றோன் எனப் புகழப்படுவான் என்பதை,

**“கேடும் பெருக்கமும் இல்லல் நெஞ்சத்து**

**கோடாமை சான்றோர்க் கணி”**[3] **(குறள்.*115*)**

என்ற குறள் புலப்படுத்துவதைக் காணலாம். ஒரு மனிதனிடம் நடுநிலைத்தன்மை காணப்படவில்லையென்றால் அது அவனுடைய சந்ததியையும் அந்தச் சமூதாயத்தையும் அழித்து விடும் என வள்ளுவர் உரைக்கிறார். நிலையற்ற

செல்வத்தை நேர்மையான முறையில் சேர்க்கவேண்டும் அவ்வாறு சேர்க்கவில்லையென்றால் வந்த வழியே செல்வம் சென்று விடும் என்பதை,

**"செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி**

**எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து"[4] (குறள்.112)**

என்ற குறள் உணர்த்துகிறது. நேர்மையினால் சேமிக்கும் செல்வம் தன் சந்ததியையே வாழவைக்கும் என்ற கருத்தை பதிவு செய்கின்றார். ஒரு மனிதனின் உயர்வுக்கும் தாழ்வுக்கும் அவனது ஒழுக்கமே சிறந்த பண்பாகும். அப்பண்பு அவன் நடந்து கொள்ளும் முறையைப் பொறுத்து வெளிப்படும். ஒழுக்கம் இல்லையென்றால் அவனை இழிவாக கருதுவர். எனவே, அவன் உயர்வுக்கும் தாழ்வுக்கும் சமுதாயம் அடிப்படையாகாது மாறாக அவனுடைய நடத்தையே காரணம் என்பதை,

**"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**

**உயிரினும் ஓம்பப் படும்"[5] (குறள்.131)**

என்ற குறள் தனிமனித ஒழுக்கம் பற்றிக் குறிப்பிடுகின்றது. மனிதனானவன் ஒழுக்கத்தை உயிரைவிட பெரிதாகக் கருதவேண்டும். அவ்ஒழுக்கம் இல்லாதவனிடம் செல்வம் நிலையாக இருப்பதில்லை. ஏனென்றால் அச்செல்வத்தைப் பாதுகாக்கும் தன்மை அவனிடம் இருப்பதில்லை. செல்வம் இருந்தாலும் அச்செல்வம் விரைவில் மறைந்து போகும். இதனை,

**"அழுக்காறு உடையான்கண் ஆக்கம்போன்று இல்லை**

**ஒழுக்கம் இலாண்கண் உயர்வு"[6] (குறள்.135)**

என்ற கருத்தைப் பதிவுசெய்கின்றார். ஆகவே ஒழுக்கம் என்பதைப் பண்பாட்டுடன் தொடர்புபடுத்துவர். பண்பாடு என்பது படிப்பினால் பெறுவது அன்று. ஒருவன் படித்திருந்தாலும் அவனிடம் நல்ல பண்புகள் இல்லையென்றால் அவன் தீயவனாக கருதப்படுவான் நல்ல பண்புள்ள மனிதன் உலக மக்களுடன் இன்ப, துன்பங்களில் பங்கெடுத்துக் கொண்டு வாழவேண்டும். அவ்வாறு வாழவில்லையென்றால் எவ்வளவு கல்வி கற்றாலும் அவன் கற்ற கல்விக்குப் பயனில்லை என்பதை,

**“உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்**

**கல்லார் அறிவிலாதார்”[7] (குறள்.140)**

என்ற குறளின் வழி நமக்கு அறிவுறுத்துகின்றார். எனவே ஒழுக்கம் ஒரு மனிதனுக்கு சிறந்த பண்பையும் நல்ல குணங்களையும் மற்றவர்களை மதித்து வழி நடத்திச் செல்லும் பண்பையும் வளர்க்கின்றது. உண்மையாகவும், நேர்மையாகவும் இருந்தால் இந்தச் சமுதாயத்தில் நல்நவண்ணம் வாழலாம் என்பதை அறிவுறுத்துகின்றார் ஆசிரியர்.

**நன்றி**

மனிதன் ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழவேண்டும். தனக்கு என்று கருதாது தன்னிடம் இருக்கின்ற சிறிய பொருளாக இருந்தாலும் மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்து வாழவேண்டும். மனிதப் படைப்பின் மகத்துவமே ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்வதாகும்..பிறர் நமக்குச் செய்த உதவியை செய்தாலும் மற்றவர்களுக்கு நாம் உதவி செய்தாலும் அதனை மறப்பது நல்லதல்ல. இதனை

**“நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது**

**அன்றே மறப்பது நன்று”[8] (குறள்.108)**

என்ற நற்பண்புகள் மனிதனிடம் இருக்கவேண்டியவை. ஒருவர் நமக்கு தீமையை செய்தாலும் அவர் தனக்கு என்றோ செய்த நன்றியை நாம் நினைவில் கொள்ளவேண்டும். ஒருவர் செய்த நன்றியை எப்பொழுதும் மறக்காமல் காக்க வேண்டும். இதனை,

**“எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**

**செய்ந்நன்றி கொன்ற மகற்கு”[9] (குறள்.110)**

என்ற குறள் விளக்கம் தருகின்றது. இக்குறளின் மூலம் நன்றி மறந்து செயல்படுபவர்களை வன்மையாகக் கண்டிக்கிறார். ஒருவர் செய்த நன்றி சிறியதாக இருந்தாலும் அவர் தக்க தருணத்தில் செய்த உதவியை நாம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும் அப்போது தான் அவர் செய்த நன்றி நமக்கு நன்மையைத் தரும் என்பதை,

**“காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்**

**ஞாலத்தின் மாணப் பெரிது”[10] (குறள்.102)**

என்ற குறட்பாவின் வழி ஒருவர் செய்த உதவி பெரியதாக இருந்தாலும் அவர் செய்த உதவியைச் சிறியதாக நினைப்பவர்கள் அற்பகுணங்கள் உடையவர். அது அவர்களின் இயல்பான குணத்திலேயே அமைந்திருக்கும். ஆனால், தக்கத்தருணத்தில் செய்த உதவியைப் பெற்ற நற்குணம் உடையவர்கள் அவை சிறியதாக இருந்தாலும் அதனைப் பெரியதாக எண்ணி போற்றுவர். இது அவர்களின் நற்பண்பேயாகும். ஒருவர் தமக்குத் தீமையைச் செய்தாலும் அவர் நமக்கு ஒருகாலத்தில் செய்த நன்மையை நினைத்துப்பார்க்கும் பண்பு நம்மிடம் இருக்கவேன்டும் என்கிறார். இவ்வாறு மனிதனுக்குத் தேவையான ஒழுக்கத்தைப் பற்றி வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

**இல்லறப்பண்பு**

மனிதன் தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் பேணிக்காக்க வேண்டும். அவனிடம் இருப்பதைக் கொடுத்து தானும் உண்டு வாழ்தல் வேண்டும். பண்டைய நூல்கள் அறநூல்கள் சமயநூல்கள் அனைத்தும் ஈதல் ஒழுக்கத்தைப் பேசுகின்றன. காதல் இன்பத்தைவிட ஈதல் இன்பமே பெரிது என்பது தமிழர்களின் கருத்து. நல்ல மனம் படைத்தவர்கள் ஈதல் இன்பத்தைப் பெரிதாகக் கருதுவர் அதற்கான தக்க வாய்ப்பை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருப்பார். சங்க இலக்கியமான குறுந்தொகையில் தலைவன் பொருள்தேடச் செல்கிறான், அவ்வாறு அவன் செல்லும்போது குறித்த காலத்தில் வரமுடியாத நிலையில் அவன்,

**“இரவலர் வாரா வைகல் பலவாகுக யான் செலவுறுதகவே”[11] (குறுந்.பா.137)**

என்று குறிப்பிடுகின்றான். அதாவது கொடுத்து உவந்து வாழாத வாழ்க்கை கொடிய துன்பம் தரக்கூடியது என்பது இதன் கருத்தாக அமைகின்றது. வள்ளுவர் இல்லறப்பண்பு கொண்டவனிடத்தில் அன்பு வேண்டும் என்கிறார். அன்பு இல்லாதவனிடத்தில் இல்லறப்பண்பு இருப்பதில்லை என்கிறார். இதனை,

**“விருந்து இல்லோருக்கு இல்லை பொருந்திய ஒழுக்கம்”[12] (கொ.83)**

என்று கொன்றை வேந்தன் குறிப்பிடுகின்றது. அதாவது விருந்தை உபசரிக்கும் பண்பு இல்லாதவனிடம் பொருத்தமான இல்லற ஒழுக்கம் இருப்பதில்லை என வள்ளுவர் கூறுகிறார். அன்பு உள்ளம் கொண்டவனே வீட்டிற்கு வரும் விருந்தினரை இன்முகத்துடன் வரவேற்று உபசரிப்பான். அன்பு இல்லாதவனோ உடல் எலும்பின்மேல் தோல் போர்த்திக்கொண்டு இருப்பான் என்பதை,

**"மோப்பக் குழையும் அனிச்சம் முகம் திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து"[13] (குறள்.90)**

என்ற குறள் வழி விளக்குவதைக் காணலாம். இங்கு விருந்தினரை அனிச்ச மலருக்கு ஒப்பாககுறிப்பிடுகிறார். இத்தகைய விருந்து பற்றி சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. விருந்தை உபசரிப்பது இல்லறத்தாரின் கடமைகளில் ஒன்றாகும். கணவனோடு இருந்து விருந்தை எதிர்கொள்ளவேண்டும் என்ற மரபை எடுத்துரைக்கின்றது. அதற்காக தலைவன் பொருள் தேடச்செல்வதையும் நாம் காணமுடிகின்றது. விருந்தைப்பற்றி கொன்றைவேந்தன்,

**"மருந்தே யாயினும் விருந்தோடு உண்"[14] (கொ.70)**

என்ற கருத்தை பதிவு செய்கிறது. தன் இல்லத்திற்கு வந்த விருந்தினருக்கு தன்னிடம் இருக்கின்ற சிறிய அளவு உணவாக இருந்தாலும் பகிர்ந்து கொடுத்து உண்ண வேண்டும். பசித்து வந்தவர்களுக்கு அவர்கள் மனம் குளிரச் செய்து வாழவைப்பதே மனிதர்களின் கடமையாகும்.

**நன்றி அறிதல்**

நன்றி என்பது ஒருவனிடம் காணப்படும் இறைமைப்பண்பாகும் நற்குணங்களில் மிகச்சிறந்த குணம் நன்றி அறிதல். இவை எல்லா கடமைகளுக்கும் முழுமுதற் காரணமாக விளங்குகின்றது. அதாவது ஒருவர் செய்த நன்றியை நினைவில் கொண்டு வாழ்தல் வேண்டும் இவை பிறர் சொல்லி வரக்கூடியது அன்று. அது இயல்பாகவே வரக்கூடியது. மனிதன் அதனைப் பின்பற்றி வாழ்தல் வேண்டும் என்கிறார். திருவள்ளுவர் இதனை செய்நன்றி அறிதல் என்ற அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளார். மாணிக்கவாசகர் தமது செய்யுளில் நாயினைப் பற்றி குறிப்பிடுகிறார். நாயிடம் நன்றி காட்டும் உணர்ச்சி உண்டு. அவ்வுணர்ச்சி தனக்கு இல்லையே என வருத்தமுறுகின்றார்.

நன்றி காட்டுதலினால் இறைவனை அடையமுடியும் என்றும் கருணையுள்ளம், நன்றிகாட்டும் பண்பு உள்ளவர்களிடம் மட்டுமே இறைவன் இருப்பான் என்ற கருத்தைப் பதிவு செய்கின்றார். இதனை,

**“எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**

**செய்நன்றி கொன்ற மகற்கு”[15] (குறள்.110)**

என்ற குறட்பாவின் வயிலாக அறியலாம். ஒருவன் செய்த உதவி மறவாது காத்து ஒழுக வேண்டும். ஒருவன் துன்பப்படும்போது உதவியவர்களுக்கு அவருக்குத் தேவைப்படும் காலத்தில் உதவாமல் போனால் அத்துன்பம் நம்மைவந்து வருந்தும் என்பதை,

**“கற்பித்தான் நெஞ்சமுங்கப் பகர்ந்துண்ணூன் விச்சைக்கட்**

**டப்பித்தான் பொருளே போற்றமியவே தேயமா**

**ஒற்கத்துள் உதவியார்க் குதவாதான் மற்றவன்**

**எச்சத்துள் ஆயினம் அஃது எறியாது விடாதே காண்”[16](கலி.கா.149: 4-7)**

என்ற பாடல் வழி பிறர் தமக்கு தக்க தருணத்தில் உதவி செய்தபோது அவர் துன்பப்படும் காலங்களில் நாமும் உதவி செய்து வாழவேண்டும் என்று குறிப்பிடுகின்றது. எனவே நன்றியும் தனிமனித ஒழுக்கத்தில் முக்கியப்பங்காற்றுகின்றது என்பதை அறியலாம்.

**முடிவுரை**

வள்ளுவர் தனிமனித ஒழுக்கம் அவன் வாழும் சமுதாயத்தை பிரதிபலிக்கச் செய்யும். அவன் மற்றவர்களிடம் பழகும் விதம், அவனது செயல்பாடுகள் அனைத்தும் அவனுடைய ஒழுக்கத்தைப் போற்றிக்காக்கும். மனிதனின் அறப்பண்புகளில் சிறந்த தனிமனித ஒழுக்கம் என்பது இல்லறம்,ஈதல், நன்றியறிதல் பொதுவுடைமை, கல்வி, அன்புடைமை, போன்ற அனைத்து நிலைகளில் சிறந்தவனாகத் திகழவேண்டும் அப்பொழுதான் தான் சிறந்த மனிதனாகக் கருதப்படுவான். இத்தகைய சிறப்பு மிக்க கருத்துக்களை வள்ளுவர் தமது நூலில் பதிவு செய்கின்றார். இவை அனைத்தும் உலக மக்களுக்கு பயன்படக்கூடியதாகும். அதனால்தான் இந்நூலை உலகப்பொதுமறை என்று குறிப்பிடுகின்றனர். எனவே இம்மறைநூலில்

மனிதனுக்குத் தேவையான அனைத்து வகையான கேள்விகளும் பதில் தரும்வகையில் இயற்றியுள்ளார். இத்தகைய சிறப்புமிக்க நூலில் இல்லறவியலில் காணப்படும் சில மானுட விழுமியங்களைப் பற்றி இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

**சான்றெண் விளக்கம்**

1. ஜோ.மரியனஸ் ஆரோக்கியசாமி, திருவிவிலியம், ப.116
2. இரா.இளங்குமரன், திருக்குறள், ப.24
3. மேலது, ப.24
4. மேலது, ப.24
5. மேலது, ப.28
6. மேலது, ப.28
7. மேலது, ப.28
8. மேலது, ப.22
9. மேலது, ப.22
10. மேலது, ப.22
11. புலியூர்க்கேசிகன்(உ.ஆ), குறுந்தொகை மூலமும் உரையும், ப.144
12. ந.மு.வேங்கடசாமி நாட்டார், கொன்றை வேந்தன் உலகநீதி மூதுரை, மூலமும் உரையும், ப.30
13. இரா.இளங்குமரன், திருக்குறள், ப.18
14. ந.மு.வேங்கடசாமி நாட்டார்(உ.ஆ), கொன்றை வேந்தன் உலகநீதி மூதுரை மூலமும் உரையும், ப.33
15. இரா.இளங்குமரன், திருக்குறள், ப.22
16. இரா. சரவணமுத்து, கலித்தொகை என்னும் காதல் தொகை, ப.110

**துணைநூற்பட்டியல்**

1. இளங்குமரனார்.இரா - திருக்குறள்,
திருவள்ளுவர் நிலையம்,
மதுரை,
முதற்பதிப்பு, 2020

2. கதிரைவேற்பிள்ளை - தமிழ்மொழியகராதி,
ஏசியன் கல்வியியல் சர்வீஸ் நியூடில்லி,
சென்னை,
ஆறாவது பதிப்பு, 1981

3. கலைச்சொல்லாக்கக் குழு - கலைச்சொல் பேரகராதி,
தமிழ்மண் பதிப்பகம்,
சென்னை,
முதற்பதிப்பு, 2008

4. சந்திர சேகரப் பண்டிதர்- யாழ்ப்பாண அகராதி தொகுதி 2,
தமிழ்மண் பதிப்பகம்,
சென்னை,
இரண்டாம் பதிப்பு, 2005

5. சரவணமுத்து.இரா - கலித்தொகை என்னும் காதல் தொகை,
சாரதா பதிப்பகம்,
சென்னை,
முதற்பதிப்பு, 2008

6. புலியூர்க்கேசிகன் (உ.ஆ)- குறுந்தொகை,
சாரதா பதிப்பகம்,
சென்னை,
ஏழாம் பதிப்பு, 2020

7. வேங்கடசாமி நாட்டார்.ந.மு(உ.ஆ)- கொன்றை வேந்தன், உலக
நீதி,மூதுரை
மூலமும் உரையும்,
சராதா பதிப்பகம்,
முதற்பதிப்பு, 2021